Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 02 [ 15 . 04 . 1993 ] வியாழக்கிழமை ஓசை 56

## நிர்வாக சேவை பரீட்சைக்கு கிராம சேவகர்கள் தோற்றலாம்

இலங்கையின் நிர்வாக சேவைப் பரீட்சைக்கு கிராம சேவகர்களும் இனி மேல் தோற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மேலும் கூறுகையில், பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு இது தொடர்பாக தீர்மானம் ஒன்றை மேற்கொண்டிருப்பதாகவும், முதலாவது தரத்தில் பத்து வருட காலமும் சுப்றா தரத்தில் மூன்று வருட காலமும் சேவையாற்றியிருக்கும் கிராம சேவையாளர்கள் பொது நிர்வாக சேவையாளர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படவுள்ளனர் என்றும், இதன் மூலம் கிராம சேவையாளர்களும் நிர்வாக சேவையில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு பிறந்த வேளை எறிகணைத் தாக்குதல்

[மல்லாகம்]

நேற்று முன்தினம் இரவு7.45 மணியளவில் புத்தாண்டு பிறந்த வேளை வலி வடக்குப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் சுமார் 5 எறிகணைகள் வரை ஏவினர். இவை, தெல்லிப்பழை, அளவெட்டிப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதேவேளை இராணுவ காவலரண்களிலிருந்து இதேநேரம் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றது. [09]

## கிளாலி கடற்பரப்பில் புலிகள் - படை மோதல்

கிளாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் இடம் பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு 10-45 மணியளவில் கிளாலி கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலேயே மேற்படி மோதல் இடம்பெற்றதாக தெரியவருகிறது.

இம்மோதலைத் தொடர்ந்து கடற்படை பீரங்கிப் படகிலிருந்து கரையோரப் பகுதிகளை அண்டி பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டன (9,86)

## சினைப்பர் தாக்குதலுக்கு ஓர் இராணுவம் பலி

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் சினைப்பர்தாக்குதலில் ஓர் இராணுவம் பலியானதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் இராணுவ காவலரண் ஒன்றிலிருந்தஇராணுவத்தினர் மீது தொலைவில் இருந்து தாக்குதலை விடுதலைப்புலிகள் மேற்கொண்டதாகவும் அவ் இராணுவ சிப்பாய் அவ்விடத்திலேயே மரணம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## போரதீவில் சுற்றிவளைப்பு ஒரு போராளி வீரச்சாவு

மட்டக்களப்பு போரதீவு என்ற இடத்தில் கடந்த ஞாயிறு பிற்பகல் 2.50 மணியளவில் விடுதலைப் புலிகள் போராளிகள் சென்று கொண்டிருந்த போது இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின் போது போராளி ஒருவரும், முழுநேர ஆதரவாளர் ஒருவரும் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை மேகராஜ் கந்தையா நேசராஜ குலசிங்கம் (கோவில் போரதீவு மட்டக்களப்பு) மற்றும் முழுநேர ஆதரவாளரான ராஜன் (காரைதீவு - மட்டக்களப்பு) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### ஆதரவாளரும் வீரச்சாவு

இச்சுற்றிவளைப்பின்போது கனகம்மா, சந்திரமதி, பூமணி ஆகியோரது வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டன.

## ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்

# பாராளுமன்ற தெரிவுக்குழு விரைவில் யாழ்.வர திட்டம்

## விடுதலைப் புலிகளை சந்திக்க முயற்சிகள் எடுக்கப்படுமாம்

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்ட அறிக்கை தயாரிப்பதில் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு விரைவில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ்ப்பாணம் செல்லும் இத் தெரிவுக் குழு விடுதலைப் புலிகளை சந்திக்க முயற்சிகள் மேற் கொள்ளும் எனவும் தெரியவருகின்றது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ஐக்கிய தேசியக் கட்சி மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும், பாராளுமன்றத் தெரிவுக் குழு தெரிவிக்கும் யோசனைகளை செயற்படுத்தி இப் பிரச்சினைக்கு விரைவில் நல்ல முடிவு காண முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார பூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

அவ் வட்டாரங்கள் மேலும் கூறுகையில்; எந்தவொரு இனத்தவருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லாமல் இப்பிரச்சினைக்கு தீர்வு காண ஐக்கிய தேசியக் கட்சி உறுதி கொண்டிருப்பதாகவும், தற்போது பாராளுமன்ற தெரிவுக் குழு அதன் இறுதி அறிக்கையை தயாரிக்கும் நிலையில் இருப்பதாகவும், அக் குழு விரைவில் யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தன.

இதேவேளை யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளையும் சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## தீர்வை முன்வைத்தால் பிரச்சினை உருவாகுமாம்

### சிறிசேன கூரே தெரிவிப்பு

''நாம் வடக்கு கிழக்கு இணைப்பைஎதிர்க்கின்றோம். ஆளும்கட்சி என்ற ரீதியில் நாம் சிறிது காலங்களுக்கு தெரிவுக் குழுவிடம் எந்த

தல் பிரசாரத்தில் ஐ.தே.க எந்த நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என கேட்கப்

அவர் பதிலளித்தார். ஐ.ஐ.தே.மு கடும் போட்டியாக தேர்தலில் ஐ.தே.கவிற்கு

## தபால் விநியோகம்

'வாதுவ' கப்பலில் யாழ். மாவட்டத்திற்கு எடுத்துவரப்பட்ட தபால்கள் இன்று வியாழக்கிழமை உரியவர்களுக்கு வீநியோகிக்கப்பட இருப்பதாக தபால் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கப்பலில்வந்த தபால்பொதிகளும் யாழ். தபால் திணைக்கள உத்தியோகத்தர்களால் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ். தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன. [யோ]

## அன்னைபூபதி நினைவாக உண்ணாவிரத நிகழ்வு

தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவாக யாழ். இந்துக்கல்லூரியிலும், கோப்பாய் - நீர்வேலிப் பிள்ளையார் கோயில் முன்பாகவும், மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலிலும், நாளை காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதேவேளை சிரமதானப் பணியாக, பண்ள-சுரபி சனசமூகநிலைய வீதி, உடுப்பிட்டி பராசக்தி சனசமூக நிலையம் என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன் தும்பளை கிழக்கு பிரதான வீதி, உடுப்பிட்டி வல்வெட்டித்துறையிலிருந்து செல்லும் மாவீரர் துயிலும் இல்ல வீதி என்பன துப்புரவு செய்யப்படும்.

## கொப்பேகடுவ மரணம்குறித்து விசாரிக்க

## 3 பொதுநலவாய நீதிபதிகள் அரசாங்கத்தால் நியமனம்

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மற்றும் ஒன்பது பேரினதும் மரணம் தொடர்பாக விசாரிக்கப் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதிபதிகளை அரசு நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் கே.எச்.ஜே. விஜயதாஸா தெரிவித்தார்.

தற்போது கடமையிலிருக்கும் இந்தமூன்று நீதிபதிகளின் பெயர் விபரங்களை வெளியிட அவர் மறுத்தார்.

மூன்று நீதிபதிகளும் கடமையாற்றும் நீதிபதிகள். ஆகவே அவர்கள் விசாரிக்கும் வழக்குகள் சம்பந்தமாக மாற்றுஒழுங்குகளைச் செய்தபிறகேஒருவசதியான திகதியைத் தெரிந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

ஒரு நீதிபதி ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர் என்றும், திருமதி லலி கொப்பேகடுவவின் விருப்பம்போல், அவர் விரும்பிய நாடுகளிலிருந்து நீதிபதிகளை நியமிக்கவில்லை என்றும் கே. எச். ஜே. விஜயதாஸா தெரிவித்தார்.

லெப். ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விமல ரெட்னா உட்பட பத்து அதிகாரிகள் கடந்த வருடம் ஆகஸ்ட் 8-ம் திகதியன்று கண்ணிவெடியில் சிக்கி மரணமானது தெரிந்ததே.

## பிரேமா - சிறிமா இணைந்து தீர்வு கொண்டுவர வேண்டும்

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் இராணுவ சிப்பாய் அவ்விடத்திலேயே மரணம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## போரதீவில் சுற்றிவளைப்பு ஒரு போராளி வீரச்சாவு

மட்டக்களப்பு போரதீவு என்ற இடத்தில் கடந்த ஞாயிறு பிற்பகல் 2.50 மணியளவில் விடுதலைப் புலிகள் போராளிகள் சென்றுகொண்டிருந்த போது இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின் போது போராளி ஒருவரும், முழுநேர ஆதரவாளர் ஒருவரும் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த வீர வேங்கை மேகராஜ் கந்தையா நேசராஜ குலசிங்கம் (கோவில் போரதீவு மட்டக்களப்பு) மற்றும் முழுநேர ஆதரவாளரான ராஜன் (காரைதீவு - மட்டக்களப்பு) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். இச்சுற்றிவளைப்பின்போது கனகம்மா, சந்திரமதி, பூமணி ஆகியோரது வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டன.

### ஆதரவாளரும் வீரச்சாவு

## ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர் தமிழகத்தில் சுட்டுக் கொலை

(சென்னை)

இராமநாதபுரத்திலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றிலிருந்து தப்பியோட முனைந்த ஈ. பி. ஆர். எல். எப். குழுவைச் சேர்ந்த ஒருவர் தமிழக பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஈ. பி. ஆர். எல். எப் ஐ சேர்ந்த சிவானந்தன் என்பவரின் நெருங்கிய சகாவான பாலசுப்பிரமணியன் நேற்று முன்தினம் அதிகாலை பொலிஸ் காவலில் இருந்து தப்பியோட முனைந்த போது பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. பொலிசாரின் துப்பாக்கியை பறித்துக்கொண்டு ஓடமுயன்ற இவரை சப் இன்ஸ்பெக்டர் ஒருவரே சுட்டுக்கொன்றார்.

ஒரிசாவில் உள்ளஇவ்வமைப்பின் முகாமிலிருந்து நவீன ஆயுதங்களுடன் வெளியேறிய சிவானந்தன் நான்கு தினங்களுக்கு முன் தமிழகத்தில் கைது செய்யப்பட்டார் அவர் கொடுத்த தகவலின் பேரில் பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக மேற்படி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

சிவானந்தன் போதைப் பொருள் கடத்தல், தேச விரோத செயல்களிற்காக ஏற்கனவே கைது செய்யப்பட்டவர் என பொலிசார் தெரிவித்தனர்.

## தீவக மக்களின் உலர்உணவு விநியோகத்தில் தாமதம்

[யாழ்ப்பாணம்]

தீவகப் பகுதிகளுக்கு தொடர்ச்சியாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாமையினால் அவர்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளதாக இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகம் கண்டனம் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும்: இடம்பெயர்ந்த மக்களுக்கு என வழங்கப்பட்டு வரும் இலவச உலர் உணவு நிவாரணமானது கடந்த மார்ச்மாத இறுதி இரண்டு வாரங்கள் உட்பட ஏப்பிரல் மாதத்திற்குமான கொடுப்பனவுகளும் இதுவரை வழங்கப்படவில்லை

கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டு செயலக கையிருப்பில் இருந்த பொழுதும் இவ் விநியோகம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பட்டினி நிலை தொடர்கிறது மேலும் புதுவருடத்தை முன்னிட்டாவது இந்த நிவாரணப் பொருள்கள் கிடைக்குமென எதிர்பார்த்திருந்த மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந் நிலையில் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் துரிதமாக செயற்பட்டிருப்பின் மார்ச் மாதம் வழங்கப்படாத இரு கட்டங்களையாவது வழங்கியிருக்க முடியும். இவ்வாறு தொடர்ந்து தாமதித்து வழங்குவதால் இடம்பெயர்ந்து பல்வேறு கஷ்டத்தின் மத்தியில் வாழும் மக்கள் மேலும் பாதிக்கப்படுவதுடன் குறிப்பாக அகதிமுகாம்களில் வாழ்பவர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சி மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும், பாராளுமன்றத் தெரிவுக் குழு தெரிவிக்கும் யோசனைகளை செயற்படுத்தி இப் பிரச்சினைக்கு விரைவில் நல்ல முடிவு காண முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார பூர்வ வட்டாரங்கள் கூறியுள் [...] கூறுகையில்; எந்தவொரு இனத்தவருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லாமல் இப் பிரச்சினைக்கு தீர்வு காண ஐக்கிய தேசியக் கட்சி உறுதி கொண்டிருப்பதாகவும், தற்போது பாராளுமன்ற தெரிவுக் குழு அதன் இறுதி அறிக்கையை தயாரிக்கும் நிலையில் [...] இருப்பதாகவும் தெரிவித்தன.

இதேவேளை யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளையும் சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# தீர்வை முன்வைத்தால் பிரச்சினை உருவாகுமாம்

### சிறிசேனகூரே தெரிவிப்பு

''நாம் வடக்கு கிழக்கு இணைப்பைஎதிர்க்கின்றோம். ஆளும்கட்சி என்ற ரீதியில் நாம் சிறிது காலங்களுக்கு தெரிவுக்குழுவிடம் எந்த யோசனையையும் சமர்ப்பிக்காது இருக்கின்றோம். நாம் அவ்வாறு எமது யோசனையை வெளியிட்டால் அது பல்வேறு வழிகளில் வெவ்வேறு அபிப்பிராயங்களை தோற்றுவித்துவிடும்''. இவ்வாறு அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சி பொதுச்செயலாளருமான சிறிசேனா கூரே கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பிரச்சினை குறித்து மாகாணசபை தேர்தல் பிரசாரத்தில் ஐ. தே க எந்த நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''எனினும் பாராளுமன்றத் தெரிவுக்குழு செய்யும் சிபார்சை நாம் முழுமையாக ஆதரிப்போம்'' என்றும் அமைச்சர் கூரே தெரிவித்தார்.

மாகாணசபை தேர்தல்கள் ஒத்திவைக்கப்படலாம் என்று பேச்சடிபடுகின்றதே என்று கேட்கப்பட்ட போது, ''இது பொய்; லலித்தலைமையிலான ஜ ஐ. தே முன்னணி தான் இவ்வாறு கூறுகின்றது'' என அவர் பதிலளித்தார். ஐ. ஐ. தே. மு கடும் போட்டியாக தேர்தலில் ஐ. தே. கவிற்கு விளங்குமா என்ற கேள்விக்கு நிச்சயமாக இல்லை. எமக்கு ஐ. ஐ. தே. மு ஒரு பொருட்டல்ல. அது தனிநபர்களில் தங்கியுள்ளகட்சி அந்நபர்கள் ஐ. தே. க கொள்கைகளை எதிர்க்கவில்லை. ஜனாதிபதி ஆட்சி முறையைத்தான் எதிர்க்கின்றனர். இந்த ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் தான் அவர்கள் சுமார் 13 வருடங்கள் அமைச்சர்களாக இருந்தனர் என பதிலளித்தார் அமைச்சர் சிறிசேன கூரே.

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# ஜனாதிபதி விஜயத்திற்காக வீதி ஓரக் காடுகளுக்கு தீ!

### பாதுகாப்பு ஏற்பாடு காரணமாம்

(கொழும்பு)

மட்டக்களப்பிற்கு எதிர்வரும் ஜூலை மாதம் சிறிலங்கா ஜனாதிபதி விஜயம் செய்வதை முன்னிட்டு வெலிகந்தை - வாழைச்சேனை பிரதான வீதியின் இரு புறத்திலும் உள்ள காடுகள் இராணுவத்தினரால் தீ வைத்து அழிக்கப்பட்டுவருவதாக பீ.பி.ஸி செய்தியாளர்களில் ஒருவரான ஜஸ்வந்தர்சிங் தெரிவிக்கின்றார். காடுகள் எரிக்கப்படுவதால் அப்பகுதி ஓரே கரும் புகைமயமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வீதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து படையினரைப் பாதுகாக்க இது அத்தியாவசியமாக இருக்கின்றது என படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனராம். இந்த வீதிவழியாகவே மட்டக்களப்பிற்கு ஜனாதிபதியும் வரத்திட்டமிட்டுள்ளாராம்.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை குறித்து விபரித்த ஜஸ்வந்தர்சிங் கிழக்கில் போர் முடிந்துவிட்டதாக அதிகாரிகள் கூறுகின்றபோதும் அங்கு நுழைகின்றபோது கிழக்கிலும் இன்னமும் போர் நடப்பதை காட்டும் சான்றுகளைக் காணக்கூடியதாக உள்ளது.

இத்தனைக்கும் மத்தியில் ஜனாதிபதி கிழக்கிற்கு இப்போது செல்வதற்கு காரணம் அங்கு சுமுகநிலை தோன்றிவிட்டது என வெளி உலகிற்கு காட்டுவதற்காக இருக்கலாம் என்றும் அச்செய்தியாளர் சுட்டிக்காட்டுகின்றார்.

கிழக்கில் பகலில் இராணுவ நடமாட்டமும் இரவில் புலிகளின் நடமாட்டமும் காணப்படுவதாகவும் மட்டக்களப்பு நகரில்கூட இரவில் படைகள் முகாமிற்கு திரும்பிவிடுவதாகவும் அதன்போது புலிகள் நகரில் நடமாடுவதாகவும் அப்பகுதி மக்கள் கூறியதாக ஜஸ்வந்தர்சிங் தனது கிழக்கிற்கான போராட்டம் என்னும் தனது செய்திக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை மின்சாரசபை தனியார் மயமாகும்?

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை தனியார் மயப்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை மின்சார சபையை பதினொரு பகுதிகளாக பிரித்து அதில் ஒவ்வொரு பகுதியையும் தனியாரிடம் ஒப்படைக்க இலங்கை மின்சார சபை முயன்றுவருகின்றது.

இதன் பகுதிகளை பொறுப்பேற்க மகாராஜா நிறுவனம், ஜோன்கீல் நிறுவனம், நவலோக்க நிறுவனம் என்பன விருப்பம் தெரிவித்துள்ளன. இவ்வாறு தனியார் மயப்படுத்தப்பட்டால் மின்சார கட்டணம் பல மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது

## வங்கிகளை ஒன்றிணைக்க சட்டத் திருத்தம்

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றை ஒன்றிணைக்கும் முகமான சட்டத் திருத்தம் ஒன்று பாராளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது. இந்தப் பிரேரணைக்கான சட்டத் திருத்தங்கள் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக அமைச்சரவையின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக இலங்கை வங்கியின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கத்தால் நியமனம்

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மற்றும் ஒன்பது பேரினதும் மரணம் தொடர்பாக விசாரிக்கப் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதிபதிகளை அரசு நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் கே.எச்.ஜே. விஜயதாஸா தெரிவித்தார்.

தற்போது கடமையிலிருக்கும் இந்தமூன்று நீதிபதிகளின் பெயர் விபரங்களை வெளியிட அவர் மறுத்தார்.

மூன்று நீதிபதிகளும் கடமையாற்றும் நீதிபதிகள். ஆகவே அவர்கள் விசாரிக்கும் வழக்குகள் சம்பந்தமாக மாற்றுஒழுங்குகளைச் செய்தபிறகேஒருவசதியான திகதியைத் தெரிந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

ஒரு நீதிபதி ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர் என்றும், திருமதி லலி கொப்பேகடுவவின் விருப்பம்போல், அவர் விரும்பிய நாடுகளிலிருந்து நீதிபதிகளை நியமிக்கவில்லை என்றும் கே. எச். ஜே. விஜயதாஸா தெரிவித்தார்.

லெப். ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விமலரெட்னா உட்பட பத்து அதிகாரிகள் கடந்த வருடம் ஆகஸ்ட் 8-ம் திகதியன்று கண்ணிவெடியில் சிக்கி மரணமானது தெரிந்ததே.

## பிரேமா - சிறிமா இணைந்து தீர்வு கொண்டுவர வேண்டும்

### சிறினிவாசன் கோரிக்கை

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும், எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஒன்றிணைந்து வடக்கு-கிழக்கு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருமாறு யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கே. சிறினிவாசன் கேட்டுள்ளார்.

தேசியத் தலைவர்களாகிய நீங்கள் இருவரும் தேசபக்தி உடையவர்கள் என்ற வகையில் ஒன்றுசேர்ந்து யுத்தத்தை ஒருமுடிவுக்கு கொண்டு வரவழி செய்யுமாறு அவர் தனது கடிதத்தில் இருவரையும் கேட்டுள்ளார்.

கடிதத்தின் பிரதி சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டார நாயக்காவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தமிழர் செய்வது நீதியான யுத்தம் என்பதனால் அவர்களின் உணர்வு பலமடைந்திருப்பதோடு, மிகவும் கஷ்டமான நிலையிலும் வாழப் பழகிக் கொண்டுள்ளார்கள். அத்துடன் பல தற்கொலைத் தாக்குதல்களையும் செய்துள்ளார்கள்.

தமது உயிரைத் தியாகம் செய்த அப்பாவி மக்களின் உயிர்கள் வடக்கிலும், கிழக்கிலும் எதிரொலிக்கின்றன. சக்கரவர்த்தி அசோகனின் உணர்வுகள் அவர் காலத்தில் எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். இறந்தவர்களின் உயிர்கள் சாந்தியடையட்டும். வடக்கு-கிழக்கு மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து ஒரு மனிதாபிமான தீர்வை எட்டவேண்டும்

தீர்வை எட்டுவதைத் தாமதப்படுத்தினால் தமிழ் ஈழத்துக்கான கோரிக்கை மேலும் வலுவடையும்.—இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1978 ஆம் ஆண்டு

## அரசியல் யாப்பை ஏற்றது எமது பெரும் தவறாகும்

### லலித் அத்துலத் முதலி

''1978ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டதன் மூலம்நான் ஒரு தவறை இழைத்து விட்டேன் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இவ்வாறான தவறை ஏற்றுக்கொள்ளும்ஒருவர் தன்னுடைய நல்லெண்ணத்தை நிரூபிப்பதற்காகதன்னுடைய சகல பதவிகளையும் துறக்க வேண்டும். என்னுடைய இந்தத் தவறுகளைத் திருத்துவதற்காகத்தான் நான் என்னுடைய சகல பதவிகளையும் துறந்தேன்.''

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலி தெரி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மன்னாரில் ஊரடங்கு

மன்னார் தீவு உட்பட மன்னார் மாவட்டம் முழுவதிலும் நேற்று பிற்பகல் 2 மணி முதல் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வரிவிளம்பரம்

**புதுவருஷ பலாபலன்கள்**

இன்றைய முகூர்த்த கைவிசேஷம், கைரேகை சாஸ்திரம் (இருதய ரேகையின் பலன்கள்) செவ்வாய் மாற்றம் அடங்கியது. ரூ. 8-50 எங்கும் விற்பனையாகின்றது. பால ஜி, மக்மிலன் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். (நூலாசிரியர்: prof. சத்தியதாசன்). (4683)

**ஜெசித்தாரா உணவகம்**

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

**UNIVERSITY OF JAFFNA**
**TENDER NOTICE**

Tenders are invited from Contractors registered for Civil Engineering Works with University of Jaffna or ICTAD for

Flooring to Partially Completed Student Centre and Improvements

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from 1993-04-19-1993-04-22 on Producing receipt from Bursar, University of Jaffna for the Payment of the Following tender fees.

a) Refundable Rs 2000/-
b) Non - Refundable Rs. 200/-

Tenders Should be sent to reach Registrar, University of Jaffna not Later than 10.00 a.m. on 1993-05-04

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR
University of Jaffna.

P O BOX 57,
Thirunelveli...

## பொதுக்கூட்டம்

மாதகல் லூர்துமேரி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு

18-4-1993 ஞாயிறு காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இடம்:- மானிப்பாய் செல்லமுத்து வீதியிலுள்ள கடற்புலிகள் காரியாலயம்.

சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

-- செயலாளர்

(4623)

## G. A. Q. 94 (வெளிவாரி)

யாழ். பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள் 24 4 93 காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

## G. A. Q - 94

பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதிவினை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் தேவையானவர்களும் பெற்றுக்கொள்ளலாம்.

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு:
S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

(சி-6409)

## வீரத்தாய்



அந்நியர் ஆதிக்கத்தை அடக்கிட
அன்னையவள் புறப்பட்டாள்
உண்ணா நோன்பதனை உருக்கமுடன்
மட்டுநகர் தன்னிலே ஆரம்பித்தாள்
வீரம் செறிந்த இவள் – தயங்கவில்லை
சாவுதனை வரவேற்க.
வேண்டுகின்றோம் இவள் வீரம்
ஈழமெங்கும் பரவி நிற்க!

## ஜெசித்தாரா உணவகம்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின் தரமிகு சுவையான உணவுப் பார்சல்கள் பகல் 11-30 மணிமுதல் பிற்பகல் 3-30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்:

விலை விபரம்:

| | | |
|---|---|---|
| மரக்கறி | - | 24.50 |
| மீன் | - | 28.50 |
| இறைச்சி | - | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

(சி-6367)

## உணவு 'பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

முகாமையாளர்
ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6366)

## ரேஸ்ரி

**பழப்பான** விற்பனையாளர்களுக்கு

உங்களுக்கு தேவையான பழப்பானங்களை

பின்வரும் எமது முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வடமராட்சியில்

சாயிகிருஷ்ணா, வதிரி சந்தி, கரவெட்டி

தென்மராட்சியில்

அறிவகம், சாவகச்சேரி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி 6384)

## 4-ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
1970
—
01
—
28



துரோகிகளால் பறிப்பு
1989
—
04
—
15

## 4 ஆம் ஆண்டு நீங்காத நினைவு



செல்வன்

**ஆசைமுத்து யேசுராசா**
**(யேசு)**

பிறப்பு: 14-03-1962 இறப்பு: 15-04-1989

எங்கள் அன்புச் செல்வமே நீர்
எம்மை விட்டுப் பிரிந்த நாளில் இருந்து
உம்மை மறக்க முடியாமல் உம்மைப்
பார்த்து பார்த்து வந்த முகம் பாதியிலே
போய் விட்டது எங்கள் குடும்பத்தின்
பாச தெய்வமே இந்த தெய்வத்தை இழந்து
எங்கள் இதயம் துடிக்கின்றதே.

உன்பிரிவால் துயருறும்,
ஐயா, அம்மா, அக்கா, அத்தான்,
தம்பிமார், மருமகன்மார்,
உறவினர், நண்பர்கள்.

வளாக லேன்,
திருநெல்வேலி.

(4690)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-15

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை - அக்கரைப்பற்று 40-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

❊ யோகராசா [கோணாவில், அக்கரைப்பற்று - அம்பாறை]

1986 ஆம் ஆண்டு திருமலை - கும்புறுப்பிட்டிப் பகுதியில் இனங்காணாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

❊ உதயன் [ஜோர்ஜ் யோககுமார் - சாம்பல்தீவு - திருமலை]

1988 ஆம் ஆண்டு ...

wing tender fees.
a) Refundable
Rs 2000/-
b) Non - Refundable
Rs. 200/-

Tenders Sh uld be sent to reach Registrar, University of Jaffna not Later than 10 00 a. m. on 1993-05-04

Tender forms can be inspected free of charge at Planning Br. nch, University of Jaffna during office hours.

Tender Board University of Jaffna reserves t'e right to reject any tender.

REGISTRAR
Unive sity of Jaffna.

P O BOX 57,
Thirunelvely,
JAFFNA.

(சி-6378)



அந்நியர் ஆதிக்கத்தை அடக்கிட
அன்னையவள் புறப்பட்டாள்
உண்ணா நோன்பதனை உருக்கமுடன்
மட்டுநகர் தன்னிலே ஆரம்பித்தாள்
வீரம் செறிந்த இவள் – தயங்கவில்லை
சாவுதனை வரவேற்க.
வேண்டுகின்றோம் இவள் வீரம்
ஈழமெங்கும் பரவி நிற்க!

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

(சி-6423)

"இளந்தென்றல்"

# புத்தாண்டு வாழ்த்துக்களை

தெரிவித்து

2-வது ஆண்டு நிறைவில் மகிழ்ந்து

எழில் கொஞ்சும் நிழற்படங்கள்
எடுத்துக்கொள்ள அழைக்கிறது

# 'இளந்தென்றல்'

படப்பிடிப்பாளர்

14, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-6417]

அறிவகம், சாவகச்சேரி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி 6384)

## 4-ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்: 1970 – 01 – 28

துரோகிகளால் பறிப்பு: 1989 – 04 – 15



### ஜீவா
(தம்பிராசா பிரபாகரன்)

எம் கண்ணான மகனே பிரபா
நீ மறைந்து சென்றதே ஆண்டு நான்கு
சிலிர்க்குதே எங்கள் நெஞ்சம்
போன இடம் சொல்லாயோ
ஆறாது ஆறாது எம் நெஞ்சம்
இது அழுதாலும் தீராது துன்பம்
உன்னை எம் கண்ணில் இருந்து
ஒளித்து ஒளித்து கொண்டு சென்று
ஒட்டு மடத்தில் வைத்து ஒழித்தார்கள்
கொடியவர்கள் உன் உயிரை இவர்கள்
ஓடம் ஏறி ஒரிசாவிற்குச் சென்றாலும்
ஓடியே வாழவேண்டும் இவ்வுலகில்.

பிரபா வீதி,
நாவலடி,
அரியாலை.


உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, அக்கா, தம்பிமார்
தங்கை, உற்றார், உறவினர்

(சி-6391)

## 4 ஆம் ஆண்டு நினைவு

மலர்வு: 11 – 12 – 1967

உதிர்வு: 15 – 04 – 1989



### இராஜதுரை இராஜநேசன்
[பாப்பா]

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

தந்தை, தாய்,
சகோதரர், உறவினர்.

[4675

உன்பிரிவால் துயருறும்,
ஐயா, அம்மா, அக்கா, அத்தான்,
தம்பிமார், மருமகன்மார்,
உறவினர், நண்பர்கள்.

வளாக லேன்,
திருநெல்வேலி.

(4690)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-15

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை - அக்கரைப்பற்று 40-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

❋ யோகராசா [கோணாவில், அக்கரைப்பற்று - அம்பாறை]

1986 ஆம் ஆண்டு திருமலை - கும்புறுப்பிட்டிப் பகுதியில் இனங்காணாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

❋ உதயன் [ஜோர்ஜ் யோககுமார் - சாம்பல்தீவு - திருமலை]

1988 ஆம் ஆண்டு பூநகரி முக்கொம்பன் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தன்னைத் தானே சுட்டு வீரச்சாவெய்திய -

கப்டன் நிக்சன் [யோவான் பத்திநாதன் - நறுவிலிக்குளம், வங்காலை - மன்னார்]

இதே சுற்றிவளைப்பில் சகதோழராற் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

2-ம் லெப். சங்கர் [செல்லையா தயாபரன் - சாமிப்புலம், நல்லூர், பூநகரி - மன்னார்]

கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் எமது முகாமொன்றின் மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

றெஜி [பாஸ்கரன் அசோக்குமார் - 10-ம் படிவம், தர்மபுரம் - கிளிநொச்சி]

1989 ஆம் ஆண்டு அம்பாறை - தங்கவேலாயுதபுரம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

குரு–சயனம் [தர்மரட்ணம் தவேந்திரன் - வீதானை வீதி, தம்பிலுவில்- 02 - அம்பாறை]

எல். பி. [கந்தக்குட்டி சுந்தரராஜன் - விநாயகபுரம், திருக்கோயில் - அம்பாறை]

வரதன் [இராஜவேல் சிவானந்தமூர்த்தி - மகாவித்தியாலய முன்வீதி, தம்பிலுவில்-02 - அம்பாறை]

மணலாற்றில் சிறிலங்காப் படையினர் மீது பதுங்கியிருந்து மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய –

2–ம் லெப். குணம் [கணேசலிங்கம் ஜெகநாதன் - கிண்ணியா திருமலை]

2-ம் லெப். கரன் [வேலாயுதம் சசிசரன் சாம்பல்தீவு - திருமலை]

யாழ். ஒட்டுமடம் பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆதரவாளர் -

ஜீவா [தம்பிராசா பிரபாகரன் - நாவலடி, அரியாலை - யாழ்.]

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். அரசடியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991 ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய -

ஸ்ரீபன் [தம்பையா உமாசிவம் - நெற்புலவு, பூநகரி - மன்னார்]

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/6407]

### சிந்தனைக்கு

அனுபவம் கண்டிப்பான ஆசான்; பரீட்சையை முதலில் நடத்தி விட்டு பாடத்தை பின்பே சொல்லிக் கொடுக்கும்.

வெர்னான் ஸேண்டர்ஸ்லா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-04-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## புலிகளின்றித் தீர்வில்லை

"விடுதலைப் புலிகளின் பங்களிப்பில்லாமல் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியற் தீர்வொன்றைக் காண முடியாது." இவ்வாறு யாழ். மாவட்ட எம். பிக்களில் ஒருவரான சிறினிவாசன் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. சிறினிவாசனின் இவ்யோசனை அவரது மூளையில் திடீரென உதித்ததொன்றல்ல. அவரது கடந்த கால அரசியல் தொடர்பிலும், அனுபவத்திலும் கிடைத்ததொன்று, அதாவது இந்தியாவுடனும் பின்னர் சிறிலங்கா அரசாங்கத்துடனும் ஒட்டி, உறவாடி, செயற்பட்டு அதில் ஆழ்ந்து அமிழ்ந்து ஏற்பட்ட தோல்வியினால் எழுந்ததொன்று.

சிறினிவாசன் தனது இம்முடிவிற்குக் கூறும் காரணம் "விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்களுக்குப் பெருமளவிலதான ஆதரவுண்டு என்பதும், அவர்கள் தமது அரசியல் அபிலாசைகளை எய்துவதற்காகத் தொடர்ந்தும் ஆயுதப் போரை முன்னெடுத்து வருகின்றார்கள்" என்பதுமே ஆகும். அதாவது மக்கள் ஆதரவின்றியும், கொழும்பில் இருந்து கொண்டு சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதினாலும் பிரயோசனம் எதுவும் விளையப் போவதில்லை என்பதையே சிறினிவாசன் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளனர். அதாவது வரலாற்றைப் புரிய மறந்த சிறினிவாசன் நேரடியாகப் பெற்ற அனுபவத்தின் வெளிப்பாடு இது.

சிறினிவாசனின் இதேபோன்றதொரு கருத்தை அமைச்சர் தொண்டமானும் அண்மையில் வெளியிட்டிருந்தார். "எந்தப் பிரச்சினை பற்றிப் பேசுவதானாலும் அதனைச் சம்பந்தப்பட்ட நபர்களுடன்தான் பேச வேண்டும். இதனால்தான் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டுமென நான் வற்புறுத்துகின்றேன்" என அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் தொண்டமானினதும், சிறினிவாசன் எம். பியினுடையதும் கருத்துக்கள்-அவர்கள் எப்படிப்பட்ட அரசியல் வாழ்க்கை, கொள்கை உடையவர்களாக இருப்பினும் - யதார்த்தத்தின்பாற்பட்டதாகும். இதனைக் கண்டுகொள்வதற்குப் பெரிதாக எந்தவித ஆய்வும் தேவையில்லை. தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஆயுதப் போராட்ட வடிவத்தை விடுதலைப் புலிகளே

# பிரபாகரனுடன் பேசுவதே பிரச்சினை தீர்க்க உதவும்

### - அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

எந்தப் பிரச்சினை பற்றிப் பேசுவதானாலும் அதனை சம்பந்தப்பட்ட நபர்களுடன்தான் பேசவேண்டும். இதனால்தான் பிரபாகரனுடன் பேசவேண்டும் என நான் வலியுறுத்துகிறேன் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார். காலி சங்கமித்தா மகா வித்தியாலயத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர் பத்திரிகையாளர்களிடையே பேசினார்.

ஜனநாயகவழிக்கு வந்துள்ள கட்சிகளின் கருத்துக்களை நிராகரித்து புலிகளின் தலைவருடன் மாத்திரம் தாங்கள் பேசவிரும்புவதேன்என பத்திரிகையாளர்கள் வினவியபோதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

வடக்கு கிழக்கு இணைப்பு பிரச்சினைக்கு பண்டாரநாயக்காவும், டட்லி சேனநாயக்கர்வும் சரியான வழியைக் காணாது தப்பித் துவந்தனர். மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் நிலைப்பாட்டில் மாற்றம் தேவை என சிபார்சு செய்கின்றது. இதற்கு என்னால் இணக்கம் தெரிவிக்க இயலாது எனவும் நிருபர்களின் மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டார்.

பெரும்பாலும்நான்வெளியிடும் கருத்து பத்திரிகைகளில் வேறு விதமாக வெளியிடப்படுகின்றது. எனது மக்கள் எப்போதும் என்னுடன் இருக்கின்றனர். தேவையற்றோர் கட்சியிலிருந்து விலகிச் செல்வதால் எந்தப் பிரச்சினையும் எனக்குக் கிடையாது. எவ்வளவு சோதனை ஏற்பட்டாலும் எனது நிலைப்பாட்டிலிருந்து அசையாமல் இருந்து வருகிறேன் என்றும் அவர்கூறினார்.

தோட்டத் தொழிலாளர்கள்

## தமிழராகப் பிறந்தமையாலும் பாதிப்பு அடையும் நிலை

—வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

தமிழ் மக்கள் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி தமிழராகப் பிறந்தமையாலும் பாதிக்கப்படுகின்றனர் என்று இரத்தினபுரீ மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், நவசமசமாஜக் கட்சியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

வட்டக்கொட நகரில் கட்சியின் தேர்தல் காரியாலயத்தை திறந்துவைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில்; ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு நீண்டகாலமாக துணை போகும் தோட்டத் தொழிலாளர்கள் எந்தவித பயனையும் இதுவரைஅடையவில்லை.

தோட்டங்கள் தனியார் மயமாவதை எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஏகமனதாக எதிர்த்த போதும் சிலர் ஒத்துழைத்தனர். 25 நாள்கள் வேலை வழங்கப்படும் அல்லது அதற்குரிய சம்பளம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் இன்று தோட்டங்களில் நடப்பது என்ன? தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியிருக்கும் வீடும்நிலமும்உடனே கிடைக்கப் போவதாக கூறினார்கள். ஆனால்இன்றுவரை கிடைத்ததாக இல்லை.

இலங்கையில் இந்திய கடவுச் சீட்டு பெற்று இந்தியாவிற்கு போக முடியாமலும் விரும்பாமலும் துன்பமடையும் தொழிலாளர்களுக்கு இங்கேயே இருப்பதற்கான பிரஜா உரிமை வாங்கிக் கொடுக்கப் பட்டதா? வெளிநாட்டு முதலாளிகள் இலங்கைப் பிரஜா உரிமை பெற்றுக்கொடுப்பதற்கான சிபார்சுகள் தலைவர்களால் செய்யப்படுகின்றது என்றும் சுட்டிக் காட்டினார்.

கேகாலை தமிழ்ப்பாடசாலைகளில்

## பொலித்தீன் துணியிலிருந்து கல்விகற்க வேண்டியநிலை

(கொழும்பு)

கேகாலை மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளில் மாணவ மாணவிகள் பொலித்தீன் துணியைத் தரையில் விரித்துவிட்டு அதிலிருந்து கல்விகற்பதைக் கண்டுள்ளேன்என்றுகேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஏ.டி. சிறிசேன தெரிவித்தார்.

தெரனியகலைசிறிகதிரேசன் தமிழ் மகாவித்தியாலயத்திய அவர் மேலும் கூறுகையில் இம் மாவட்டத்திலுள்ள சுமார் பதினான்கு தமிழ்ப் பாடசாலைகளின் நிலையும் இதுவேதான் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இப் பாடசாலைக்கு கூட 38 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் 14 ஆசிரியர்களே உள்ளனர்

### ப. நோ. கூ. கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்துள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றிற்கு இடம் பெயர்வினால் ஏற்பட்டுள்ள இழப்புக்களை உறுதிப்படுத்தல், மற்றும் கணக்குப் பதிவேடுகள் நிலை, ஐந்தொகை மீதிகள் உறுதிப்படுத்தல், சங்க சொத்துக்கள் உள்ளவாறு கணித்தல், மதிப்பீடு செய்தல் ஆகிய விடயங்களை யிட்டு கணக்காய்வாளர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்பான 'கலந்துரையாடல்' ஒன்று இம் மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11-00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி கணக்காய்வு ஆணையாளர் அவர்களின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (22)

### பிரசாரங்கள் இன்னமும் இல்லை

நவசமசமாஜக் கட்சியின் தலைமையிலான ஜனதா விமுக்தி பெரமுனையும், ஜனநாயக ஐக்கிய முன்னணியும் தமது தேர்தல் பரப்புரைகளை ஆரம்பித்துள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி அதன் தலைவர் சார்க் மாநாட்டிற்கு சென்றமையினாலும் சிங்கள, தமிழ் புதுவருடத்தை ஒட்டியும் தேர்தல் கூட்டங்களை இன்னமும் ஆரம்பிக்கவில்லை.

சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன எக்சத் பெரமுனை தமது தலைவி மலேசியாவில் இருந்து வந்த பின்

### தியாகத்தின் தீபமது

அலையென எழுந்தவள் – பெரும்
ஆதிக்கத் தீயினை
அணைந்து தணித்தவள்
மெழுகென கரைந்தவள்
மேதினி எங்கிலும் - தமிழ்
மேன்மை யுரைத்தவள்
சதிகார இந்தியாவின்
சமாதான முகத்திரையை
கிழித்தெறிய முனைந்தவள் - தமிழ்
கீதமாய் மலர்ந்தவள்
சமாதானப் படையென்று
சாதிக்க வந்தவர்கள்
தமிழீழப் பிள்ளைகளை
பாடையிலே அனுப்பிடவே
புயலென எழுந்தவள் - பெரும்
பூகம்பமாய் வெடித்தவள்
இருளதன் கொடுமையாலே
இன்னல்கள் பலநூறு
இனங்கண்டு துடிக்கையிலே - தன்
இன்னுடலை நெருப்பாக்கி
இருள்போக்க நினைத்தவள்
மட்டுநகர் மீதினிலே
பஞ்சம் பிறந்த தென்றே
சொட்டு உணவுமின்றி – அன்னை
பசி கிடந்து துடிதுடித்தாள்
அன்னியர் தளை தகர்த்து
அடிமையல்ல நாங்களென
எட்டுத் திசைகளெங்கும்
கொட்டு முரசறைந்து
தமிழ் வீரம் உரைப்பதற்கு–அவள்
தன் உணவை நிறுத்தி விட்டாள்
தீயை எரித்தெழுந்த - பெரும்
தியாகத்தின் தீபமது
தீந்தமிழர் நெஞ்சமதில்
தினமும் ஒளிர்கின்றது

- அளவை வாசவன்

## நெல்லை வீதியில் கொட்டி படையினர் சோதனை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு-கல்முனை இடையிலான 24 கிலோ மீற்றர் தூரமுள்ள வீதியில் சிறிலங்காப் படையினரின் 12 சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் கொளுத்தும் வெயிலில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர் வேறுபாடு இன்றி அனைவரும் இறக்கப்பட்டுசோதனையிடப் படுகின்றனர்.

சோதனையில் ஈடுபடும் விசேட அதிரடிப்படையினர் நெல்மூடைகளை தனித் தனியாக வீதியில் கொட்டிசோ

களுவாஞ்சிக்குடி, ஒந்தாச்சிமடம், பெரியகல்லாறு, பெரிய நீலாவணை, துறை நீலாவணை ஆகிய பகுதிகளில் வீதியோரங்களில் உள்ள மதில்களை வீதியிலிருந்து வீட்டை பார்க்கக்கூடியவாறு இடைவெளிவிட்டு துவாரங்கள் போடுமாறும் அதிரடிப்படையினர் குடியிருப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளனர்

மட்டக்களப்பிலிருந்து செட்டிப்பாளையம் வரையிலான சோதனை முகாம்களில் பொலிசாரும் களுவாஞ்சிக்குடியிலிருந்து கல்முனை வரை

தையே சிறினிவாசன் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளனர். அதாவது வரலாற்றைப் புரிய மறந்த சிறினிவாசன் நேரடியாகப் பெற்ற அனுபவத்தின் வெளிப்பாடு இது.

சிறினிவாசனின் இதேபோன்றதொரு கருத்தை அமைச்சர் தொண்டமானும் அண்மையில் வெளியிட்டிருந்தார். ''எந்தப் பிரச்சினை பற்றிப் பேசுவதானாலும் அதனைச் சம்பந்தப்பட்ட நபர்களுடன்தான் பேச வேண்டும். இதனால்தான் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டுமென நான் வற்புறுத்துகின்றேன்'' என அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் தொண்டமானினதும், சிறினிவாசன் எம். பி யினுடையதும் கருத்துக்கள்-அவர்கள் எப்படிப்பட்ட அரசியல் வாழ்க்கை, கொள்கை உடையவர்களாக இருப்பினும் - யதார்த்தத்தின்பால்பட்டதாகும். இதனைக் கண்டுகொள்வதற்குப் பெரிதாக எந்தவித ஆய்வும் தேவையில்லை. தமிழ்மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஆயுதப் போராட்ட வடிவத்தை விடுதலைப் புலிகளே கொடுத்துள்ளனர், இதனால் பிரச்சினைக்குத் தலைமைத்துவம் கொடுத்து வழிநடத்திச் செல்லும் புலிகளுடனேயே பேசி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதே நிதர்சனம்.

பிரச்சினையுடன் தொடர்பில்லாதவர்களுடன் பேசுவதினாலோ அன்றி அவர்களின் வாக்குறுதிகளிலோ, அன்றி அவர்களுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களினாலோ பிரச்சினையைத் தீர்த்து விட முடியாது. இது குறித்துச் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நேரடியான அனுபவங்களும் உண்டு.

தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் பலம் பொருந்திய இந்தியாவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி இனப்பிரச்சினையைத் தீர்க்கவென ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டது. ஆனால், இந்திய இராணுவம் எவ்வளவுதான் முயற்சித்தும், அதனால் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுவிட முடியவில்லை.

இதேபோன்றே போராட்டத்தை வழிநடத்திச் செல்லும் விடுதலைப் புலிகளைத்தவிர்த்து, கொழும்பில் தங்கியுள்ள தமிழ்க்குழுக்களுடன் பேச்சுவார்த்தையை பிரேமதாசா அரசாங்கம் இரண்டு வருடங்களுக்கு மேலாக நடத்தியும் தீர்வொன்றைக் கண்டுகொள்ள முடியவில்லை. செலவீடுகளே மிஞ்சின.

நடப்புநிலைமையைச் சரியாகக் கணிப்பீடு செய்யத் தெரிந்தவர்களுக்கு இவ்விரண்டு அனுபவங்களுமே போதுமானது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை உணர்ந்து கொள்வதற்கு, இதனை சிங்கள ஆட்சியாளர்கள் முற்றாகப் புரிந்துகொள்ளவில்லை என்றும் கூறுவதற்கில்லை. ஆனால், அவர்கள் இராணுவ வெற்றி ஒன்றின்மூலம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைத் திணிக்கலாம் என எண்ணுகின்றனர். ஆனால், சிங்கள அரசின் இத் திட்டம் வெற்றிபெறப் போவதில்லை. ஏனெனில், நெருக்கடிகளுக்குப் பணிந்ததாக விடுதலைப் புலிகளின் வரலாற்றில் இல்லை. ஆகையினால் விடுதலைப் புலிகளின் பலவீனத்தில் அரசியல் தீர்வை திணிக்கலாம் என்றஅரசாங்கதின் முடிவு தப்புக் கணக்காகவே இருக்கும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

---

யும் இதுவரை அடையவில்லை.

தோட்டங்கள் தனியார் மயமாவதை எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஏகமனதாக எதிர்த்த போதும் சிலர் ஒத் ... பட்டதா? வெளிநாட்டு முதலாளிகள் இலங்கைப் பிரஜா உரிமை பெற்றுக் கொடுப்பதற்கான சிபார்சுகள் தலைவர்களால் செய்யப்படுகின்றது என்றும் சுட்டிக் காட்டினார்.

---

கேகாலை தமிழ்ப்பாடசாலைகளில்

## பொலித்தீன் துணியிலிருந்து கல்விகற்க வேண்டியநிலை

(கொழும்பு)

கேகாலை மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளில் மாணவ மாணவிகள் பொலித்தீன் துணியைத் தரையில் விரித்துவிட்டு அதிலிருந்து கல்விகற்பதைக் கண்டுள்ளேன்என்றுகேகாலை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரான ஏ.டி. சிறிசேன தெரிவித்தார்.

தெரனியகலைசிறிகதிரேசன் தமிழ் மகாவித்தியாலயத்திற்கென, புதிய கட்டடத்தை திறந்து வைத்து உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் இம் மாவட்டத்திலுள்ள சுமார் பதினான்கு தமிழ்ப் பாடசாலைகளின் நிலையும் இதுவேதான் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இப் பாடசாலைக்கு கூட 38 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் 14 ஆசிரியர்களே உள்ளனர் அதிலும் நான்குபேர் இடமாற்றம் கோரியிருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

---

கணக்காய்வு ஆணையாளர் அவர்களின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (22)

## பிரசாரங்கள் இன்னமும் இல்லை

நவசமசமாஜக் கட்சியின் தலைமையிலான ஜனதா விமுக்தி பெரமுனையும், ஜனநாயக ஐக்கிய முன்னணியும் தமது தேர்தல் பரப்புரைகளை ஆரம்பித்துள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி அதன் தலைவர் சார்க் மாநாட்டிற்கு சென்றமையினாலும் சிங்கள, தமிழ் புதுவருடத்தை ஒட்டியும் தேர்தல் கூட்டங்களை இன்னமும் ஆரம்பிக்கவில்லை.

சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன எக்சத் பெரமுனை தமது தலைவி மலேசியாவில் இருந்து வந்த பின்னரே தேர்தல் பிரசார ஒழுங்கு பற்றிய செய்திகள் தெரியும் என தெரிவிக்கப்படுகின்றது.

---

## நெல்லை வீதியில் கொட்டி படையினர் சோதனை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு-கல்முனை இடையிலான 24 கிலோ மீற்றர் தூரமுள்ள வீதியில் சிறிலங்காப் படையினரின் 12 சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் கொளுத்தும் வெயிலில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர் வேறுபாடு இன்றி அனைவரும் இறக்கப்பட்டுசோதனையிடப் படுகின்றனர்.

சோதனையில் ஈடுபடும் விசேட அதிரடிப்படையினர் நெல்மூடைகளை தனித் தனியாக வீதியில் கொட்டிசோதனைசெய்தபின்பே கொண்டு செல்ல அனுமதிக்கின்றனர்.

களுவாஞ்சிக்குடி, ஒந்தாச்சிமடம், பெரியகல்லாறு, பெரிய நீலாவணை, துறைநீலாவணை ஆகிய பகுதிகளில் வீதியோரங்களில் உள்ள மதில்களை வீதியிலிருந்து வீட்டைபார்க்கக்கூடியவாறு இடைவெளிவிட்டு துவாரங்கள் போடுமாறும் அதிரடிப்படையினர் குடியிருப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளனர்

மட்டக்களப்பிலிருந்து செட்டிப்பாளையம் வரையிலான சோதனை முகாம்களில் பொலிசாரும் களுவாஞ்சிக்குடியிலிருந்து கல்முனை வரையிலான முகாம்களில் விசேட அதிரடிப்படையினரும் சோதனைகளில் ஈடுபடுகின்றனர்.

## மட்டு. அகதிமுகாம்களுக்கு நிதி ஒதுக்கீடு இல்லை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்ட அகதிமுகாம்களை பராமரிக்க நிதிஒதுக்கீடு கடந்த மூன்று மாதங்காலமாக வழங்கப்படாமையினால் 20 அகதிமுகாம்களில் எவ்வித பராமரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப் படவில்லை.

இதனால் அகதிமுகாம்களில் உள்ள 1744 குடும்பங்களைச் சேர்ந்த 7121 பேர் எவ்வித பராமரிப்பும் இன்றி அவதியுறுகின்றனர். இதேசமயம் வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் உள்ள அகதிகளுக்கு கடந்த 6 மாதங்களாக உலர் உணவு நிவாரணம் வழங்கப் படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

## மாதந் தோறும் சுகாதார கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதாரம், போசாக்கு சம்பந்தமான கருத்தரங்குகளை அந்த அந்தப் பகுதிச் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் மாதம் தோறும் நடாத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மேற்கொண்டு வருகிறார்.

கிராமங்கள் தோறும் உள்ள சனசமூக நிலையங்களில் ஒவ்வொருமாதமும் இக்கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

சிறுவர் பாடசாலைப் பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளை இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் சுகாதார ரீதியில் வழிநடாத்த வேண்டும் என்றும், போஷாக்கு உணவு வழங்குவது சம்பந்தமாகவும் இக் கருத்தரங்குகள் இடம்பெறும். (24)

## மூதாட்டியின் சடலம் கரை ஒதுங்கியது

கடற்கரையில் ஒதுங்கிய வயோதிப மாது ஒருவரின் சடலத்தை, காவல் துறையினர் மீட்டெடுத்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இச் சம்பவம், கடந்த ஞாயிறு மாலை வடமராட்சி கிழக்கு கடலில் நடைபெற்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: புலோலி தெற்கில் வசித்து வந்தவரான வயோதிப பெண், சில நாட்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து வெளியேறினார் பின்னர் இவரது சடலம் நாகர் கோவில் கடற்பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது. இவ்விடயத்தை அறிந்து ஸ்தலத்திற்கு சென்ற, நாகர்கோவில் காவல் துறையினர் சடலத்தை மீட்டெடுத்து மந்திகை வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

அங்கு வைத்து நடைபெற்ற மரண விசாரணையின் பின்னர், உறவினரிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. இறந்தவர் திருமதி சிவனடியான் வள்ளிப்பிள்ளை (70) என்னும் மூதாட்டியாவார். (30)

---

# ஈரான் இராணுவ ரீதியாக பலமடைந்து வருகிறது

## இந்திய பாதுகாப்பு அறிக்கை

(டில்லி)

பிராந்தியத்தில் நடைபெறும் ராணுவ அமைப்பு ஏவுகணை திட்டங்கள், விமானப்படை அபிவிருத்தி ஆகியவற்றில் ஈரான் முன்னிற்பது வெளிப்படையாகத் தெரிகின்றது என்றும் எதிர்கால நெருக்கடியொன்றில் ஈரான் பாகிஸ்தானுக்கு உதவக் கூடுமென்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்று கூறுகிறது. ஈரான் அதன் படை பலத்தை நவீனமயமாக்கி பலப்படுத்துவது இந்தியாவின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இடைத்தூரஏவுகணைகளை வடகொரியாவிலிருந்து ஈரான் வாங்கும் ஒப்பந்தமொன்று தயாராவதாக தெரிவிக்கப்படுகின்றது. வடகொரிய ஏவுகணைகளை ஈரான் பெற்றால் ஆசியாவிற்கும் மத்திய கிழக்கிற்கும் ஈரான் ஆபத்தை உண்டாக்குமென அவ்வறிக்கை கூறுகின்றது. அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளின் கணிப்பில் இவ் ஏவுகணைகள் 600 மைல் செல்லக்கூடியன. பாகிஸ்தான் எல்லையிலிருந்து இந்திய மேற்கு எல்லையும் 600 மைல் தூரமே எனக் கூறப்படுகின்றது.

## கர்நாடக காட்டில் வீரப்பன் குழு கைவரிசை

### வோக்கிரோக்கியை பறித்துச்சென்றனர்

[பங்களூர்]

சந்தனக்கட்டை கடத்தல்காரன் வீரப்பனின் குழுவைச் சேர்ந்த சிலர் கடந்த ஞாயிறனறு இரவு கர்நாடக கொள்ளக்கால் வனப்பகுதியில் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

அன்றையதினம் இரவு இப்பகுதி வனப்பகுதியில் கடமையிலிருந்த வனக்காவலரை கட்டிப்போட்டுவிட்டுஇவர்கள் அங்கிருந்த வோக்கிரோக்கி சாதனம் மற்றும் துப்பாக்கி ஒன்றையும்கைபபற்றிச்சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே முன்பு வீரப்பனிடம் பணியாற்றிய ஒருவர் பங்களூரில் அவரின் வீட்டினருகே வீரப்பன் கோஷ்டியினரால் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அவரின் சடலத்தை வீரப்பன் ஆட்கள் எரித்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

## பிரேமா இந்திய விஜயம்

(டில்லி)

நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று முன்தினம் இந்தியா போய்ச் சேர்ந்தார். அவர் நேற்று உத்தரப் பிரதேசம் வாரணாசியில் அமைந்துள்ள பௌத்த மத தலங்களுக்கு சென்றார்.

## இந்தியக்கப்பல் மூழ்கியது

(மட்றிட்)

பிரிட்டனிலிருந்து பம்பாய் நோக்கி வந்து கொண்டிருந்த இந்திய சரக்கு கப்பலான ''விஸ்வமோகினி'' ஸ்பெயின் கரைக்கு அப்பால் 80கிலோ மீட்டர் தொலைவில் கடலில் மூழ்கி விட்டது. இக் கப்பல் பணியாளர்கள் 39பேரை காணவில்லை என்றும் 16பேர் காப்பாற்றப்பட்டு விட்டனர் என்றும் ஒருவர் பலியானதாகவும் முன்வந்த செய்திகள்தெரிவித்தன.

கப்பலில் சரக்குகளை கையாளும்போது ஏற்பட்ட விபத்தில் கப்பலின் பக்கவாட்டில் துளை ஒன்று வீழ்ந்ததில் அது மூழ்கியதாக கூறப்படுகிறது.

# ஈழநாதம்

## அறிவித்தல்

எமது சங்கத்தின் மானிப்பாய் வீதியிலுள்ள மக்கள் கடையில் பொதி ஒன்று 11 - 04 - 1993 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பொருள் கொள்வனவுசெய்ய வந்தவரினால் தவறவிடப்பட்டு, அப் பொருள் கிளை முகாமையாளரினால் தலைமைக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பொதிக்குள் பெறுமதியான பொருள் (உரொக்கம் பவுண்) இருப்பதால் உரியவர்கள் ஆதாரம் காட்டி வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்

[சி-6429]

## 60-ம் நாள் நினைவஞ்சலி

### அ. பயஸ்

15 - 02 - 1993 அன்று அகால மரணமடைந்த
எமது கழக நிர்வாக உறுப்பினரும்,
சிறந்த விளையாட்டு வீரனுமாகிய


அமரர் அ. பயஸ் அவர்களுக்கு

**எமது கண்ணீர் அஞ்சலிகள்**

சென் தோமஸ் விளையாட்டுக் கழகம்
மாதகல்.

[சி-6432]

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



நிர்வாக

உயர் பதவி வகிக்க வாய்ப்புகள் ஏற்படும் என்றும் தெரிவித்தார். கடந்த பத்தொன்பது ஆண்டு காலமாக எந்த பதவி உயர்வும் பெறாத கிராம சேவகர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

---

பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

### A/L 95

புதிய II பிரிவு

| | |
|---|---|
| பொருளியல் | - வரதராஜன் |
| அளவையியல் | - மனோகரன் |
| கணக்கியல் | - சௌந்தி |
| வர்த்தகம் | - பசில் |
| தமிழ் | - மீரா |
| இந்து நாகரிகம் | - பாலா |
| புவியியல் | - யோசப் |
| அரசியல் | - பஞ்சாட்சரம் |
| கிறீஸ்தவம் | - கொலின்ஸ் |

ஆரம்பம் - 17 - 4 - 93
காலை 7.00 மணி

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

★ 1-வது பிரிவிற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

(6432)

## குடை விளம்பரத்துக்கு ரூபவாஹினியில் தடை

ரூபவாஹினி வர்த்தக விளம்பரங்களில் காணப்படும் வியாபாரச் சின்னங்களுக்கும் அரசியல் கட்சிகளின் தேர்தல் சின்னங்களுக்கும் இடையில் ஒற்றுமை காணப்படுவதால் ரூபவாஹினி வர்த்தக விளம்பரங்களுக்குத் தடை விதிப்பதில் நியாயம் எதுவுமில்லை என்று சுதந்திர தொடர்புச் சாதன அமைப்பின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

இதன் காரணமாக ஏற்கனவே அட்டவணைப் படுத்தல் சட்ட விளம்பரப் பட்டியலுக்குத் தடைவிதிக்கும் செயல் ரூபவாஹினிப் பார்வையாளரின் அறிவைக் கொச்சைப் படுத்தும் செயலாகும்.

தேர்தல் சின்னங்களை ஒத்திருக்கும் விளம்பரங்களை ரூபவாஹினி அதிகாரிகள் நிறுத்தி வைக்கமுடியாது. ரூபவாஹினி ஓர் அரச நிறுவனம். அதன் பணிப்பாளர்கள் அரசினால் நியமிக்கப்பட்டவர்கள். தேர்தல் காலத்தில் விளம்பரங்களைத் தடைசெய்யும் அவசியம் ஏற்பட்டால் அதற்காக சுயாதீனமான ஒரு குழு தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப் பட வேண்டும் அந்தஅதிகாரம் ரூபவாஹினிக்கு இருக்கக் கூடாது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரம் ஒன்றில் மழையைக் காட்டினால் குடையும் வரும் என்பதற்காக விளம்பரத்தைத் தடைசெய்ய வேண்டுமா? மக்கள் கதிரைகளில் இருப்பதைப் போன்று விளம்பரம் வந்தால் அதையும் தடை செய்வதா? அரசின் இந்த எண்ணமே கேலிக்கிடமானதுஎன்று இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது

### அரசியல்

வித்தார் மாகாணசபை தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் தொடர்ந்து;

"1978ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பை அக்காலத்தில் எதிர்க்கட்சிகள்எதிர்த்தபோதிலும் கூட அதனை மாற்ற வேண்டும் என அவை ஒரு போதும் கோரவில்லை. ஆனால் நான் ராஜினாமா செய்தபின்னரே எம்முடன் அவர்களும் இந்த அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்ற பிரசாரத்தில்ஈடுபடுகின்றனர் என்று கூறினார்.

மேலும், 'இன்றைய தலைமைத்துவத்தின் கீழ் படித்த புத்தி ஜீவிகள் அனைவரும் வெளியேற்றப்படுகின்றார்கள் ஒரு தனிமனிதனின் கருத்தின் அடிப்படையிலேயே எல்லாம் நடைபெறுகிறது இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் பெரும்பாலான நிர்வாக இயந்திரங்களைச் செயற்படுத்த முடியாத நிலைமை ஏற்படும்.

"மாணவர்களின் மதியஉணவிற்காக இப்பொழுது மூன்று ரூபா வழங்கப்படுகிறது. இது மூன்று ரொபிகளைவாங்க மட்டுமே போதுமானது" என்றார்

## பிறந்த நாள் வாழ்த்து

### நடராசா சிவமுகுந்தன்(மதி)

தனது 17ஆவது பிறந்த தினமாகிய 15-4-93 இன்று தலைவன் ஆசிபெற்று கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் வாழ அப்பா, அம்மா, தம்பிமார் வாழ்த்துகின்றோம் எங்கிருந்தாலும் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

[4691]

மலரும் சித்திரை புதுவருடத்தில் அனைவருக்கும்

**எமது இனிய நல்வாழ்த்துக்கள்**

வாங்கிடுவீர் பனை வெல்லம் வளர்ந்திடுவோம் சுயசார்பில் !

தரமான, சுத்தமான, தித்திக்கும் வெல்லங்களை வாங்க நாடுங்கள் !

# பனை வெல்லம்

---

யாழ். செஞ்சிலுவைச் சங்க உபதலைவர்
க. புவனேந்திரன் அவர்களின்

சர்வதேச நியதிகளை மீறிய படுகொலையை
கண்டித்தும், சமூக சேவையாளர்களின்
பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கோரியும்

சமூகசேவை அமைப்புக்களின் தொண்டர்கள்,
பணியாளர்கள் நடாத்தும்

## ஆர்ப்பாட்ட பேரணி

காலம்: 16-04-1993 வெள்ளிக்கிழமை காலை 9 மணி

இடம்: நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றல்

இப்பேரணியில் சகல சமூக சேவை நிறுவனங்களின் தொண்டர்களும், ஊழியர்களும் மற்றும் சீருடை சார்ந்த செஞ்சிலுவை சங்க தொண்டர்கள், ஊழியர்கள், சாரணர்கள், திரிசாரணர்கள், கடற்சாரணர்கள், சாரணத் தலைவர்கள், சாரணத் தலைவிகள், பெண்கள் வழிகாட்டிகள் (சாரணியர்), பரியோவான் முதலுதவிப் படை பிரிவினர், தாதியர் பிரிவினர், றொற்றறி கழக உறுப்பினர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், லியோ கழக தொண்டர்கள், இண்டறக் கழக தொண்டர்கள் மற்றும் சமூக சேவையாளர்கள் அனைவரையும் தத்தமது சீருடையுடன் அணிதிரளுமாறு அப் பிரிவு சார்ந்த பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

செயலாளர்

சமூக சேவை அமைப்புக்களின்
தொண்டர், பணியாளர் ஒன்றியம்

(சி-6433)

இலங்கை செஞ்சிலுவை சங்கம்
உடுவில் பிரிவு

## கண்காட்சி ஒத்திவைப்பு

எதிர்வரும் 16, 17-ந் திகதிகளில் மரு/இராமநாதன் கல்லூரியில் நடைபெற இருந்த பொது நிகழ்வு கண்காட்சி தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத் தருகிறோம். மீள நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இலங்கை செஞ்சிலுவை சங்கம்
உடுவில் பிரிவு

(4693)

## முக்கிய அறிவித்தல்

16 - 04 - 1993 நாளை யாழ். நகரில் தொண்டர் மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் பணியாளர்களால் நடாத்தப்படவிருக்கும் கண்டனப் பேரணியில் சகல [பாலர்பாடசாலை ஆசிரியர்கள் உட்பட] சர்வோதயத் தொண்டர்களையும் கலந்து கொள்ளும்படியும், அனைவரையும் காலை 8. 30 மணிக்கு முன்னதாக யாழ். மாவட்ட நிலையத்திற்கு சமூகம் தரும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

இங்ஙனம்,
பா. செல்வரட்ணம்
மாவட்ட இணைப்பாளர்
சர்வோதயம்,

[4694]

## மரண அறிவித்தல்கள்

### சசிதரன் சத்தியபாமா

கொல்லங்கலட்டியைச் சேர்ந்தவரும் தற்போது கந்தரோடையில் வசிப்பவருமாகிய காசிநாதர் சசிதரன் அவர் ... தெல்லிப்பழை ப. நோ.



## தியாக அன்னை பூபதி

கீழ்த்திசை ஞாயிறன்ன
கிளர்ந்த எம் வீர அன்னை–விடுதலைப்
போர்க்குரல் எழுப்பி வீரப்பெண்களின்
அணியில் முன்னணித் தலைவியுானார்.

புடமிட்ட தங்கம் போன்ற
பூபதி அன்னை எம்
இடர் கண்டு நித்தம் வெந்து
இறங்கினார் புனிதப் போரில்

அறவழிப் போரில் ஆறைந்து நாட்கள் அமர்ந்தார்
அனுதினமும் தமிழீவர்க்காக உடல் மெலிந்தார்
இந்தியப் படையினர் கெடுபிடியிடையும்
இரும்பென அன்னை அமர்ந்து அத்தனை
இடையூறுகளின் மத்தியில் அகிம்சை நெருப்பென
ஒளிர்ந்தார்.

செந்தமிழன்னை வெந்துயர் கண்டுமே வெகுண்டு
நொந்து போன மக்களுக்காய் விடுதலைத் தீயிற்கு
தன்னை ஆகுதிசெய்தார்
தியாகத்தின் தீபமானார்தீரத்தின்திருவுருவானார்,
இமயம் வரை இறவாத புகழ் படைத்தார்

**வேலணை**
**பல நோ. கூ. சங்கம்**

(சி/6428)

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
★ 1-வது பிரிவிற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

(6432)

தனது 17ஆவது பிறந்த தினமாகிய 15-4-93 இன்று தலைவன் ஆசிபெற்று கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் வாழ அப்பா, அம்மா, தம்பிமார் வாழ்த்துகின்றோம் எங்கிருந்தாலும் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

[4691]

மலரும் சித்திரை புதுவருடத்தில் அனைவருக்கும்

**எமது இனிய நல்வாழ்த்துக்கள்**

வாங்கிடுவீர் பனை வெல்லம் வளர்ந்திடுவோம் சுயசார்பில்!

தரமான, சுத்தமான, தித்திக்கும் வெல்லங்களை வாங்க **நாடுங்கள்!**

# பனை வெல்லம்

சகல தெங்கு ப.பொ.உ.வி.கூ சங்க தலைமை அலுவலகங்கள்,

சகல தெங்கு ப.பொ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைமை அலுவலகங்கள்,

மத்திய சந்தைப்படுத்தல் பிரிவுக் களஞ்சியத்திலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

மொத்த விலை 1 கிலோ ரூபா 38
சில்லறை விலை 1 கிலோ ரூபா 40

## வெல்ல சில்லறை விற்பனவு நிலையங்கள்

| | | |
|---|---|---|
| (1) | யாழ். பகுதி கொத்தணி:- | சுண்டுக்குளி பல்பொருள் அங்காடி, சுண்டுக்குளி, பாலசிங்கம் விடுதி உணவுச்சாலை யா/ பல்கலைக்கழகம் |
| (2) | அரியாலைச் சங்கம்:- | அரி கோப். பனம்பொருள் அங்காடி - மாம்பழம் சந்தி, அரியாலை |
| (3) | யாழ்ப்பாணம்:- | பனம்பொருள் விற்பனவு நிலையம்- நாவலர் வீதி, நாவாந்துறை |
| (4) | கோப்பாய்:- | கூட்டுறவு அங்காடி -இருபாலைச் சந்தி. இருபாலை |
| (5) | வலிகாமம் கொத்தணி:- | வலி.கொத்தணி விற்பனை நிலையம் -அம்பாள் கடை சங்கானை |
| (6) | மானிப்பாய் சங்கம்:- | மானி-கோப். வைத்தியசாலை முன்பாக, மானிப்பாய் |
| (7) | கோண்டாவில்:- | கற்பகதரு விற்பனை நிலையம் / களஞ்சியம் - தாவடிச் சந்தி, கோண்டாவில் |
| (8) | சங்கானை:- | பனம்பொருள் விற்பனை நிலையம் - அராலி வீதி, சங்கானை |
| (9) | அளவெட்டி/மல்லாகம்:- | கற்பகதருவின் விற்பனை நிலையம் ஸ்ரேசன் வீதி, சுன்னாகம் |
| (10) | சாவகச்சேரிச் சங்கம்:- | பொற்பதி விற்பனை நிலையம் - இல. 2, பஸ் நிலையம், சாவகச்சேரி |
| (11) | கொடிகாமம்:- | சேவை நிலையம் - கச்சாய் வீதி, கொடிகாமம் |
| (12) | பளை:- | பனம்பொருள் விற்பனை நிலையம் -பஸ் நிலையம், பளை |
| (13) | அச்சுவேலி:- | கற்பகம் மொத்த விற்பனை நிலையம், அச்சுவேலி |
| (14) | கட்டைவேலி:- | பனையகம் - கொடிகாமம் வீதி, நெல்லியடி |
| (15) | பருத்தித்துறை:- | மொத்த விற்பனை நிலையம் - பரு. தெ.ப.பொ.கூ. சங்கம் - மந்திகை |
| (16) | சமாஜம்:- | சந்தைப்படுத்தல் பிரிவு, வடமாகாண தெ.ப.பொ. சமாஜம் - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |

விளம்பர அன்பளிப்பு:
யாழ். பகுதி தெங்குபனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
★ யாழ். மாநகர தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்
★ வலி. கிழக்கு தென் பகுதி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம் (கோப்பாய்)
(4689) ★ அரியாலை தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்.

## முக்கிய அறிவித்தல்

16 - 04 - 1993 நாளை யாழ். நகரில் தொண்டர் மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் பணியாளர்களால் நடாத்தப்படவிருக்கும் கண்டனப் பேரணியில் சகல [பாலர்பாடசாலை ஆசிரியர்கள் உட்பட] சர்வோதயத் தொண்டர்களையும் கலந்து கொள்ளும்படியும், அனைவரையும் காலை 8. 30 மணிக்கு முன்னதாக யாழ். மாவட்ட நிலையத்திற்கு சமுகம் தரும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

இங்ஙனம்,
பா. செல்வரட்ணம்
மாவட்ட இணைப்பாளர்
சர்வோதயம்,

[4694]

## மரண அறிவித்தல்கள்

### சசிதரன் சத்தியபாமா

கொல்லங்கலட்டியைச் சேர்ந்தவரும் தற்போது கந்தரோடையில் வசிப்பவருமாகிய காசிநாதர் சசிதரன் அவர்களின் (கிளை முகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. ச) மனைவி சத்தியபாமா 13 - 04 - 1993 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார். புதன்கிழமை (14 - 04 - 1993) ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன.

தகவல் தருபவர்;
ஆ. காசிநாதர்

சித்தியார் வளவு,
கந்தரோடை.

(4682)

### கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

[நயினாதீவு]

[முன்னாள் சாந்தி லொச் உரிமையாளர்]

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், 101, 2ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை 14 - 04 - 93 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், வசந்தாதேவி (யாழ். வே. ம. கல்லூரி ஆசிரியை, முன்னாள் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை), Dr. சாரதாதேவி, விமல தேவி (முன்னாள் யாழ். வே. ம. க. ஆசிரியை), காலஞ்சென்ற வசந்தராசா, சாந்தாதேவி (Lon) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற Dr. தனபாலசிங்கம் முன்னாள் வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் சிவஞானம், சூரியகுமார்(Lon) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 15 - 04 - 93 வியாழக்கிழமை 2ஆம் குறுக்குத் தெருவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

101, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தகவல்: திருமதி வ. தனபாலசிங்கம் (மகள்)

[4696]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில், 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.